# பொதுமக்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## அதிகாரமளிக்கப்படாத வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகம்

# FOREX TRADING

**அதிகாரமளிக்கப்படாத மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத இணையத்தளமூடான பல வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகத் தளங்களின்/ வணிகர்களின் தோற்றம் மீது இலங்கை மத்திய வங்கியின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. உத்தரவாதமளிக்கப்பட்ட உயர்வான ஆதாயங்களுக்கான வாக்குறுதிகளுடன் அத்தகைய வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு பொதுமக்களை ஊக்குவிப்பதற்காக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள், இணையம் மற்றும் வேண்டப்படாத மின்னஞ்சல்கள் ஊடாக சில கம்பனிகளினால் விளம்பரங்கள் வெளியிடப்படுவதனையும் இலங்கை மத்திய வங்கி மேலும் அவதானித்துள்ளது.**

அண்மைக் காலங்களில் சில தனிப்பட்ட ஆட்கள் மற்றும் கம்பனிகள் மூலம் கொண்டு நடாத்தப்படுகின்ற மேற்குறித்த நடவடிக்கைகளின் காரணமாக பலர் தமது பணத்தினை இழந்துள்ளமை பற்றி இலங்கை மத்திய வங்கிக்குத் தெரியவந்துள்ளதுடன் முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ்வறிவித்தலின் நோக்கம் பின்வரும் விடயங்கள் மீது பொதுமக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகும்;

- 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய, அதன் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் பணிப்புரைகளுக்கும் உட்பட்டு, நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்கும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்கும் வெளிநாட்டுச் செலாவணியில் வணிகம் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
- அதற்கமைய, இலங்கையில் உள்ள அல்லது வதிகின்ற ஆளெவரும், வெளிநாட்டுச் செலாவணி வர்த்தக கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு அல்லது அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்காக இலங்கைக்கு வெளியில் நிதியங்களை அனுப்புவதற்கு அத்துடன் வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகத்திலிருந்து உழைத்த வருமானத்தை அல்லது இலாபத்தை பெற்றுக் கொள்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.
- இலங்கையில் உள்ள அல்லது வதிகின்ற ஆளொருவர் சார்பில், வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகத்தை அல்லது வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகம் தொடர்பிலான கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு எந்தவொரு அனுமதியினையும் வழங்கவில்லை.
- இதன் பின்னணியில், இலங்கையில் உள்ள அல்லது வதிகின்ற ஆளொருவர் வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகத்தில் ஈடுபடுதலானது வெளிநாட்டுச் செலாவணிச் சட்ட ஏற்பாடுகளின் மீறுகையாகும்.
- அத்தகைய வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்கு பொதுமக்களை ஊக்குவிக்கின்ற தரப்பினருக்கும் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களில் தாமாக ஈடுபடுகின்ற ஆட்களுக்கும் எதிராக வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளின் கீழ் இலங்கை மத்திய வங்கி நடவடிக்கைகளை எடுக்கக்கூடும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களையும் தமது பணத்தினை இழக்கும் சாத்தியமான இடர்நேர்வுகளையும் கருத்திற் கொண்டு அத்தகைய அதிகாரமளிக்கப்படாத வெளிநாட்டுச் செலாவணி வர்த்தக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதிலிருந்து விலகியிருக்குமாறு பொதுமக்கள் கடுமையாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு அத்தகைய அதிகாரமளிக்கப்படாத வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகத் தளங்கள்/ வணிகர்கள் தொடர்பான எவையேனும் தகவல்களை அல்லது முறைப்பாடுகளை **இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு** அனுப்பி வைக்கலாம்.

**பணிப்பாளர், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01

0112477255 @ dfe@cbsl.lk www.dfe.lk